# பெப்ரவரி – 17 – சனி

## தூய கன்னி மரியாவின் சபை நிறுவனர் எழுவர் நினைவு

**“நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன்” லூக் 5:32**

**முதல் வாசகம் :எசாயா 58: 9–14**

அப்போது நீ ஆண்டவரை மன்றாடுவாய் அவர் உனக்குப் பதிலளிப்பார் நீ கூக்குரல் இடுவாய் அவர் ”இதோ! நான்” என மறுமொழி தருவார். உன்னிடையே இருக்கும் நுகத்தை அகற்றிவிட்டு, சுட்டிக்காட்டிக் குற்றஞ்சாட்டுவதையும் பொல்லாதன பேசுவதையும் நிறுத்திவிட்டு,பசித்திருப்போருக்காக உன்னையே கையளித்து, வறியோரின் தேவையை நிறைவு செய்வாயானால், இருள் நடுவே உன் ஒளி உதிக்கும் இருண்ட உன் நிலை நண்பகல் போல் ஆகும்.ஆண்டவர் தொடர்ந்து உன்னை வழிநடத்துவார் வறண்ட சூழலில் உனக்கு நிறைவளிப்பார் உன் எலும்புகளை வலிமையாக்குவார் நீயும் நீர் பாய்ந்த தோட்டம் போலும், ஒருபோதும் வற்றாத நீரூற்றுபோலும் இருப்பாய்.உன் மக்கள் பண்டை நாளிலிருந்து பாழடைந்து கிடப்பவற்றைக் கட்டியெழுப்புவர் தலைமுறை தலைமுறையாக உள்ள அடித்தளங்களின் மேல் கட்டியெழுப்புவாய் தகர்ந்த மதிலைத் திரும்பக் கட்டுபவன் என்றும் குடியிருப்பதற்குத் தெருக்களைச் சீர்படுத்துபவன் என்றும் பெயர் பெறுவாய்.ஓய்வுநாளின் முறைமைகளினின்று விலகிச் செல்லாது, என் புனித நாளில் உன் விருப்பம் போல் செய்யாதிருந்து, ஓய்வு நாள் ”மகிழ்ச்சியின் நாள்” என்றும் ”ஆண்டவரின் மேன்மைமிகு புனித நாள்” எனவும் சொல்லி அதற்கு மதிப்புத் தந்து, உன் சொந்த வழிகளில் செல்லவோ உன் சொந்த ஆதாயத்தை நாடவோ வெற்றுப் பேச்சுகளைப் பேசவோ செய்யாதிருந்தால்,அப்பொழுது, ஆண்டவருக்கு ஊழியம் புரியும் மகிழ்ச்சியைப் பெறுவாய் நானோ, மண்ணுலகின் உயர்விடங்களில் உன்னை வலம்வரச் செய்வேன் உன் மூதாதையாகிய யாக்கோபின் உரிமைச் சொத்தின் மூலம் உனக்கு உணவளிப்பேன் ஆண்டவரின் வாய் இதை உரைத்தது.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது வழியை எனக்குக் கற்பியும்

**நற்செய்தி : லூக்கா 5 : 27 – 32**

அக்கா இயேசு வெளியே சென்று சுங்கச் சாவடியில் அமர்ந்திருந்த லேவி என்னும் பெயருடைய வரி தண்டுபவர் ஒருவரைக் கண்டார் அவரிடம், ”என்னைப் பின்பற்றி வா!” என்றார்.அவர் அனைத்தையும் விட்டுவிட்டு எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார்.இந்த லேவி தம் வீட்டில் அவருக்கு ஒரு பெரியவிருந்து அளித்தார். வரி தண்டுபவர்களும் மற்றவர்களும் பெருந்திரளாய் அவர்களோடு பந்தியில் அமர்ந்தார்கள்.பரிசேயர்களும் அவர்களைச் சேர்ந்த மறைநூல் அறிஞர்களும் முணுமுணுத்து இயேசுவின் சீடரிடம், ”வரிதண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து நீங்கள் உண்பதும் குடிப்பதும் ஏன்?” என்று கேட்டனர். இயேசு அவர்களுக்கு மறுமொழியாக, ”நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை.நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன்” என்றார்.

**தியானம்:** நெற்றியில் சாம்பல் பூசி நாம் தவக்காலத்தை ஆரம்பித்திருக்கின்றோம். இது மனமாற்றத்தின் காலம், நேரம் இல்லாமல் ஓடி ஓடி உழைக்கும் நம்மை நிறுத்தி நமது வாழ்வின் பாதையை திரும்பிப் பார்க்க அழைக்கும் காலம். தவறுகளை திருத்த, பாவ வாழ்வில் இருந்து விடுதலை பெற, வழிதவறிய பாதைகளை சீராக்க நமக்கு கிடைக்கப்பட்ட காலம், மத்தேயுவை அழைத்தது போல் நம்மையும் அழைக்கிறார். எழுதும் பென்சில் செய்யும் தவறுகளை அழித்து திருத்த அழிறப்பர் உதவுவது போல் நம்மை திருத்த இறைவன் உதவக் காத்திருக்கிறார். அதற்கு நாம் தயாரா? பாவிகள் தான் மனமாற்றம் பெறவேண்டும். அவர்களைத் தேடியே இறைமகன் வந்தார். ஒருகல்லை செதுக்கி எவ்வாறு ஒரு சிற்பி அழகிய சிலையை உருவாக்குகிறாரோ, அவ்வாறே இறைவன் நம்மை செதுக்கி அழகாக்க விரும்புகிறார். செதுக்கும் போது வலிக்கிறது என்று கல் சொன்னால், அது கல்லாகவே இருக்க முடியும். தன்னை செதுக்கும் சிற்பியை நம்பி தனது வேதனைகளை தாங்கும் கல்தான் அழகிய சிலையாக மாறமுடியும், மற்றவர்களை கவர முடியும். பிள்ளைகள் தவறு செய்யும்போது அடித்து திருத்தும் போது தான் அந்தப் பிள்ளை திரும்ப அதே பிழையை செய்ய தயங்கும். நாமும் கடவுளின் கரங்களில் குழந்தைகளே! எனவே நாமும் திருந்த, நம்மை திருத்த இத்தவக்காலத்தில் முயற்சி செய்வோம். முதல் வாசகத்தில் கூறப்பட்டதுபோல், வறியோருக்கு உதவி செய்து, பசித்திருப்போரின் பசியை ஆற்ற உதவுவோம். தேவையில் இருப்போரின் தேவைகளை பூர்த்தி செய்து, கண்ணீரை துடைப்போம்.